# ஏன்
# தனித் தமிழ் நாடு?

" நாதன் "

விலை சதம் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் தனித் தமிழ் நாடு ?

மக்கள் முன்னணி அரசாங்கம் தமிழ்ப்பேசும் மக்களது உரிமைகளைப் புறக்கணித்து அவர்களை "சிங்கள" அரசாங்கத்தின் நிரந்தர அடிமைகளாக்கப் புதிய அரசியல் சட்டத்தை வரைந்துள்ளது. எனவே, புதிய அரசியல் சட்டத்தைப் பகிஷ்கரிப்பதுடன் தமிழ்ப்பேசும் மக்கள் தமது சுயமரியாதையைப் பேண, உரிமையோடு வாழ, வங்காளதேச மக்களைப் போலச் சுதந்திர தனித்தமிழ் நாட்டினைப் போராடி ஸ்தாபிக்க வேண்டும் என்றும், சிங்களப் பிரதேசத்தில் வாழும் தமிழ்ப் பேசும் மக்கள் தமது சொத்துக்களையெல்லாம் விற்று, தாம் செய்யும் வேலையையும் கைவிட்டு வடகீழ் மாகாணங்களில் குடியேற வேண்டும் என்றும் தமிழரசுக்கட்சி மகாநாட்டில் தீர்மானிக்கப் பட்டது.

இத்தீர்மானம் தமிழ்ப்பேசும் மக்களைப் பாதிக்கக்கூடிய தீர்மானம். இது எம்மவர் ஒவ்வொருவரது எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடியதுமல்லாமல், எமது எதிர்காலத்தைப் பெருமளவிற்குப் பாதிக்கும். ஆகவே, இதுபற்றி நாம் ஆழமாகவும் பொறுப்புணர்ச்சியோடும் ஆராய்ந்து சிந்திக்கவேண்டும்.

**சுயநிர்ணய உரிமை:** தனியோர் இனம் தன் சுதந்திரத்திற்காகப் போராடப் பூரண உரிமையுண்டு என்பதனை எவரும் மறுக்க முடியாது. ஆயினும், இதனை ஆதாரமாகக்கொண்டு, வங்காளதேச மக்களைப்போல் இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களும் தனிநாட்டிற்காகப் போராட வேண்டும் எனக் கூறலாமா? இதற்கு விடை கூற, வங்காளதேசப் பிரச்சினை என்ன என அறிதல் வேண்டும்.

**ஏன் வங்காள தேசம்:** வங்காளதேச மக்கள் தம் சுதந்திரப் போராட்டத்திலே வெற்றியீட்டியதைப் புகழ்ந்து பேசுகிறார்கள்; பேசுவதுடன் நில்லாது தமிழ்மக்களாகிய நாமும் அவ்வண்ணமே போராட வேண்டும் என்கின்றார்கள்.

ஆனால், உண்மை என்ன? வங்காள மக்களின் சுதந்திரப் போராட்டம் தம் மொழி உரிமைக்காக அல்ல. பாகிஸ்தான் அரசாங்கம் உருது மொழியை வங்காள மக்கள்மீது 1947 இல் திணிக்க முற்பட்டபோது அவர்கள் அதனை எதிர்த்தனர். ஏகோபித்த எதிர்ப்பைக் கண்ட பாக்.அரசாங்கம் பயந்து அவர்களது மொழி உரிமையை அன்றே வழங்கி, கிழக்கு - மேற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானை இஸ்லாம் சமயஅடிப்படையில் இணைக்க முயன்றது. ஆனால், இம்முயற்சி பலிக்கவில்லை. ஏன்?.

கிழக்குப் பாகிஸ்தானின் மக்கள்தொகை, மேற்குப் பாகிஸ்தானிலும் பார்க்க அதிகமானது. ஆனால், பாகிஸ்தானின் ஆதிக்க அதிகாரமும், அரசாளப்படும் மத்திய அரசாங்கமும் சிறுபான்மையோரான மேற்குப் பாகிஸ்தானியர் வசமே இருந்தது.

அரசியல் அதிகாரம் மட்டுமல்ல, பொருளாதார ஆதிக்கமும் அவர்கள் கையிலேயே இருந்தது. கிழக்குப் பாகிஸ்தான் செல்வம் செழித்த நாடாயினும், அதனைச் சுரண்டி மேற்குப் பாகிஸ்தான் வாழ்ந்தது. தொழிற்சாலைகள் அங்கே; புதியநகரங்கள், சலுகைகள் யாவும் அங்கே; அங்குதான் பாகிஸ்தானை ஆண்ட ஒரு சில குடும்பங்களும் வாழ்ந்தன. ஆனால், கிழக்குப் பாகிஸ்தான் வறுமையில் தாண்டவமாடியது இதனையே, வங்காள தேசத்தவர் எதிர்த்தனர்.

பெரும்பான்மை மக்களாகிய தமக்கும் அரசியல் ஆதிக்கத்தில் பங்கு உண்டு, பெரும்செல்வத்திலும் தமக்குப் பங்குஉண்டு என்றனர். வங்காளத்தவர் இஸ்லாம் சமயப் பிரசாரப் போர்வையால் ஒருசில ஆண்டுகள் மயக்கமுற்ற பொழுதிலும் ஏமாற்றமடையவில்லை.

1956-ம் ஆண்டு முதல் இராணுவ சர்வாதிகார ஆட்சிமுறையினால் அடக்கப்பட்ட இவர்கள், அடக்கி ஒடுக்கப்பட்டாலும் தம்பிரதேச ஆட்சி உரிமைக்காக வாதாடிய இவர்கள், 1971-ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலிலே, அவாமிலீக்கின் தலைமையில் பிரதேச சுயாட்சிக் கொள்கையை முன்வைத்துப் போராடினர். இவர்கள், தம் மொழி உரிமைக்காக அன்றி, அரசியல் - பொருளாதார உரிமைகளுக்காகவே இத்தேர்தலில் போராடினர். இத்தேர்தலே, முதல் முதலாக மக்கட்டொகையின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் அமைந்த தேர்தலாகும். இத்தேர்தலில், முஜிபுர் அமோக வெற்றியை ஈட்டினார். தேர்தலின் அடிப்படையில், அவர் பாகிஸ்தானின் பிரதமராக வேண்டும். ஆனால், மேற்குப் பாகிஸ்தானின் அதிகார வர்க்கம் இதற்குத் தடையாக நின்று படைப் பலத்தினால் கிழக்குப் பாகிஸ்தானை அடக்கி ஒடுக்க முயன்றது. இதன் பிரதிபலிப்பே சுதந்திர வங்காள தேசம்.

கிழக்கு வங்காளத்திற்கும் ஈழத்திற்குமிடையே தொடர்பேதேனுமுண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈழமும் கிழக்கு வங்காளமும்:

ஈழத்தில் தமிழ் இனத்தோர் சிறுபான்மையினர்; வங்காள மக்கள் பாகிஸ்தானில் பெரும்பான்மையினர். 1947-ம் ஆண்டு முதல் பாகிஸ்தானின் அரசியல் அதிகாரத்தில் எவ்வித பங்கையும் வங்காளமக்கள் கொள்ளவில்லை.

ஆனல் இலங்கையில், 1947 முதல் 1956 வரையும், பின் 1965 முதல் இற்றைவரையும் அரசியல் அதிகாரத்தில் தமிழ் மக்கள் பங்குபற்றியுள்ளனர்.

வங்காளம் செல்வம் கொழித்தநாடு. ஆனல், இச்செல்வத்தால் பயனடைந்த பகுதி மேற்குப் பாகிஸ்தான். வங்காளத்தைச் சுரண்டியே மேற்குப் பாகிஸ்தான் வாழ்ந்தது.

ஆனல், இலங்கையில் செல்வம் கொழித்த பிரதேசம் சிங்களப் பிரதேசம். இப்பிரதேச வருமானத்தைக் கொண்டே, தமிழ்ப்பேசும் அரசாங்க சேவையாளர் முதலானோருக்குச் சம்பளமும், தமிழ்ப் பிரதேசத்தின் சமூக சேவைகள், பொதுநல அபிவிருத்திச் சேவைகள் முதலியவற்றிற்கும், வெங்காயம், மிளகாய் போன்றவற்றிற்கு உத்தரவாதவிலை முதலியனவும் வழங்கப்படுகின்றன.

இன்னுமோர் உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் சிறுபான்மையோராய் இருந்தும் அரசாங்க நிர்வாக அதிகாரத்தை ஆங்கிலேயர் காலம் முதல் சமீபகாலம்வரை இயக்கியவர்கள் நாமே. இன்றுகூட இந்நிலை பெரிதும் மாற்றமடையவில்லை-

ஆதலினல், ஈழத்தமிழ் பேசும் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை இருப்பினும்கூட, தனித்தமிழ் நாட்டிற்காகப் போராட வேண்டும் என்று கூறும்போது, வங்காளத்திற்கும் தமிழ் இனத்திற்குமிடையே ஒற்றுமைகாட்ட முற்படுதல் உண்மைக்குப் புறம்பானது.

### தமிழ் இனமும், தமிழ் பேசும் மக்களும் ஒன்ரு?:

**தமிழ் இனம்** என்ருல் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட திராவிட இனத்தவரையே குறிக்கும்.

**தமிழ் பேசும் மக்கள்** என்ருல், எந்த இனத்தைச் சேர்ந்தோராயினும் சரி தமிழ்மொழியைப் பேசுகின்றவர்கள் என்பதையே குறிக்கும். குறிப்பாக இலங்கைத்தமிழர், முஸ்லீம்கள், இந்திய வம்சாவழியினர் ஆகியோரைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, தமிழ்பேசும் மக்கள், தமிழ்இனம் அல்ல. ஒருமொழியைப் பேசுகின்றூர்கள் என்ற அடிப்படையில், அம்மொழியைப் பேசுகின்றவர்கள் ஓர் இனத்தவர் எனக் கூற இயலாது.

இக்காரணத்தினுல் தமிழ்இனம், தனித் தமிழ்நாடு கோருவதாயின், இலங்கைவாழ் முஸ்லீம்கள், இந்திய வம்சாவழியினர் புறநீங்கலாக இருக்கக்கூடிய தமிழர்கள் மட்டுமே இக்கோரிக்கைக்காகப் போராட வேண்டும். இவர்களது குடிசனத் தொகை தான் என்ன ?

வங்காள மக்களை ஆதாரமாகக்கொண்டு பேசுகையில், இவ்வுதாரணம் சிங்கள மக்களுக்கே பெருமளவிற் பொருத்தமானது.

## தனித்தமிழ் நாட்டுப் போராட்டம்:

தமிழ்இனம், தமிழ்பேசும் மக்களல்ல. தமிழ்ப்பேசும் மக்கள் இலங்கை யெங்கும் பரந்து வாழ்கின்றனர் இவர்களில் பெரும்பாலானேர் முஸ்லீம் மக்களும், இலங்கை இந்தியரும், தென்னகத்திலே நிரந்தரமாகக் குடியேறி வாழும் இலங்கையரும் ஆவர்.

**தமிழ் இனம் எனக் கூறப்படுவோர், தனித்து தமிழ்நாடு கோரிக்கைக்காகப் போராடினுல்,** நடப்பது என்ன ?

நைஜீரியா நாட்டில், பியாபிரா என்னும் பிரதேசத்தில் வாழ்ந்த ஐபொஸ் குழுவினருக்கு ஏற்பட்டகதியிலும் பார்க்கக் கேவலமான கதிதான்கிட்டும் என்பதில் ஐயமில்லை

இவ்வாறு கூறும்பொழுது தமிழ் மக்களுக்குப் போராட ஆண்மையில்லை எனக் கூறவில்லை, அல்லது சுயமரியாதையில்லை எனக் கூறவில்லை, அல்லது ஆற்றலும் சக்தியுமில்லை எனக் கூறவுமில்லை. ஆனுல், இவ்வித போராட்டம் சாத்தியமற்ற போராட்டமே எனக்கூறவே முற்பட்டோம். ஐபொஸ் குழுவினர் வீரத்துடன் போராடினுலும் பசி, பட்டினியால் செத்து மடிந்து பணிந்தனரே. இக்கதியே எமக்கும் கிட்டும். இப்போராட்டம் ஆரம்பித்தால், 1958-ஆம் ஆண்டு ஏற்பட்டதிலும் பார்க்கக் கேவலமானநிலையே எமக்கு ஏற்படும் அல்லவா ?

## இன்று ஏன் இக்கோரிக்கை ?:

தமிழரசுக்கட்சி இக்கோரிக்கையை இன்று கிழப்ப, மூன்று காரணங்கள் அதனைத் தூண்டுகின்றன. அவையாவன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தமிழ் வகுப்புவாதம் வட-கிழக்கில் மீண்டும் தோன்றி ..ஞல், சிங்களமக்கள் மத்தியிலே அழிந்துபோன—1970-ஆம் ஆண்டுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட—சிங்கள வகுப்புவாதம் மீண்டும் தோன்றும். இவ்வாறு தோன்றினல், ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருக்க இனத்துவேஷம் வளரும். இதனல் சிங்கள—தமிழ்ப் பிரச்சினைகள் தீராதிருக்கும் அல்லவா? தீராதிருந்தால், தமிழரசுக்கட்சி தமிழ்ப்பேசும் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றலாமல்லவா? அவர்கள்மட்டுமே நாடாளுமன்றத்திற்குப் போகவேண்டும் என்ற முயற்சி பலிக்குமல்லவா?

உண்மையிலே, புண்ணை மாற்ருத பிச்சைக்காரனுக்கும் தமிழரசுக்கட்சிக்குமிடையிலே என்னதான் வித்தியாசம்?

2. தமிழரசுக்கட்சியின் நீண்ட கால சரித்திரத்தைப்பார்த்தால், ஏதாவது ஒருசாக்குப் போக்குச் சொல்லி, முற்போக்குத் திட்டங்களை எதிர்ப்பதே அதன் சரித்திரமாகும். தமிழரசுக்கட்சியினைச் சாதாரண பாமரமக்கள் ஆதரித்தாலும் கூட, அதன் ஆட்சிப்பீடம் சோஷலிஸ பாதையை வன்மையாக எதிர்க்கின்றதென்பது சரித்திர உண்மை.

எனவேதான், ஐக்கிய முன்னணி அரசாங்கம் கொண்டுவரும் திட்டங்கள், நடவடிக்கைகள் முதலியவை தமது முதலாளித்துவ நோக்கிற்கு முரணனவை என்றதினுலும் அதன் நடவடிக்கைகள் மக்களைச் சோஷலிசப் பாதையில் கொண்டு சென்ருல் சிங்கள தமிழ்பிரச்சினைகள் காலப்போக்கில் தீர்ந்துவிடும் என்றதினுலும் இவ்வரசாங்கத்திற்கு முட்டுக்கட்டை போடவே இப்போராட்டத் தீர்மானம் எடுக்கப்பட்டது:

இல்லையேல், 1965 - 1970 வரை யூ. என். பி உடன் இரண்டறக் கலந்திருந்த அக்காலத்தில் தமிழர்களின் உரிமைகளைப் புறக்கணித்த இவர்கள், இன்று போராட்டப்பாதையை ஏன் நாடுகின்றனர்? தமிழர்கள் மீது திடீர் அன்பு கொண்டதினுலா? அல்லது, தமிழ் மொழியில் பற்று மிகுந்ததினுலா? இரண்டுமே இல்லை என்றுதான் கூறவேண்டும்.

3. ஐக்கிய முன்னணி அரசாங்கம் நீடிப்பின். தமிழர்—சிங்களவர் பிரச்சினைகள் தீர்வதுடன், வகுப்புவாதமே அழிந்து இலங்கையர் என்ற மனப்பான்மை தமிழர் மத்தியில் வளரும் எனவும் உணர்ந்தே —

கடந்த பொதுத்தேர்தலில் சிங்கள வகுப்பு வாதத்திற்குச் சாவு மணி அடித்தவர்கள் ஐக்கிய முன்னணியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலின் பின் தமிழ்ப்பேசும் மக்களை அணைக்கவே திரு. செ. குமாரசூரியர் மந்திரியாகவும், திரு. எம். சி. சுப்பிரமணியம் பாராளுமன்ற உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டனர்.

தமிழ்ப் பேசும் மக்களது குறைகளனைத்தையும் தீர்க்காவிடினும், பெருமளவிற்குத் தீர்க்க இவ்வரசாங்கம் முற்பட்டது. இதற்கு முன்னிருந்த யூ. என். பி. தமிழரசு அரசாங்கம் தீர்க்க எத்தனிக்கவில்லை. மொழிப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்குடன் புதிய அரசியல் சட்டத்தில் வித்திட்டதும் இவ்வரசாங்கமே.

ஆதலினாற்றான் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொடர்ந்து நிலைத்துவிட்டால், தமிழ் வகுப்புவாதத்திற்கும் சாவு மணி அடித்துவிடும் என்றதினாலேயே அதன் திட்டங்களை, நோக்கங்களை முறியடிப்பதற்காக தனித் தமிழ்நாடு கோரிக்கையை தமிழரசுக்கட்சி தீட்டியுள்ளது. தமிழரசுக்கட்சி சமஷ்டி அரசியல் முறைக்காகப் போராடும் எல்லையை விடுத்துத் தனித்தமிழ் நாட்டிற்காகப் போராட உதவியாக இருந்தகாரணம் மொழிப் பிரச்சினையாகும்.

**மொழிப்பிரச்சினை:** மொழிப்பிரச்சினையின் சரித்திரம் யாவரும் அறிந்த ஒன்றாகும். இருப்பினும் இதனை நாம் ஞாபக மூட்டும் முகமாக இச்சரித்திரத்தை மீட்டல் மிக நன்மையுடையதாயிருக்கும்.

முன்னைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல, யாழ்ப்பாணம் வந்தபொழுது, சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துடையனவாக விளங்கும் எனக் கூறியதைத் தொடர்ந்து மொழிப்பிரச்சினை நம் நாட்டில் உருவெடுத்தது. இப்பிரச்சினை தோன்றும் பொழுது, ஆங்கிலேயர் நம் மீது சுமத்திய முறையே நிலவியது. இதன் பிரகாரம், ஆங்கிலம் நாட்டின் நிர்வாக மொழியாக நிலவிய பொழுது சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் சம உரிமையுடைய அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாகத் திகழ்ந்தன. இலங்கை சுதந்திரநாடாகிய பின்னரும் இந்நிலை நிலைத்தது. இக்காலத்தில், சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் நிர்வாக மொழிகளாக இருக்கவில்லை என்றதன் காரணமாக, ஆங்கிலம் கற்காத 95% சிங்கள - தமிழ் மக்கள் ஆங்கில மொழியின் மூலமே அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. மேலும், இக்காலத்தில் சாதாரண மக்களுக்கும் அரசாங்கத்துக்கு மிடையே சொந்த மொழியின் மூலம் ஒருவிததொடர்பு ம்இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப்பிரச்சினை தோன்றியதும் சிங்களமக்களைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் நிர்வாக மொழியாக இருக்கலாகாது, அதனழிவில் சிங்களம் மட்டும் நாட்டின் நிர்வாக மொழியாக இருத்தல் வேண்டும் என்ற கோரிக்கை மக்களிடையே பரவியதன் காரணமாக, அதாவது சிங்கள மக்களின் மொழியுரிமைக்காகப் போராடியவர்களது ஆதரவு அதிகரிக்க, ஐக்கிய தேசியக் கட்சி பயந்து தன் மொழிக்கொள்கையை மாற்றியது. இதன்பிரகாரம், சிங்களம் மட்டுமே நாட்டின் நிர்வாக மொழியாக இருத்தல் வேண்டும் என்ற பிரேரணை 1955-ல் நடந்த கெலனியா மகாநாட்டில் ஏற்கப்பட்டது. இருப்பினும் ஆங்கிலேயரின் கைப்பொம்மைகளாக இருந்த இவர்கள் ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்திருப்பர் என்ற நம்பிக்கையாற் போலும் 24 மணித்தியாலத்தில் தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வருவேன் எனக் கூறிய காலம் சென்ற பண்டாரநாயக்காவையே சிங்கள மக்கள் நம்பினர், இதனுல், 1959 ம் ஆண்டில் நடந்த தேர்தலில், காலம் சென்ற பண்டாாரநாயக்காவின் தலைமையில் இயங்கிய மக்கள் ஐக்கிய முன்னணி அமோக வெற்றியை ஈட்டியது. பின்னர், இம்மக்கள் முன்னணியரசாங்கம், 1956-ல் தனிச் சிங்களச் சட்டத்தையும்கொண்டு வந்தது.

தனிச்சிங்களச் சட்டம் என்று சிங்களமக்களால் பேசப்பட்ட காலத்தில், இலங்கை சமசமாஜக் கட்சி சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகட்கும் சமத்துவம் இருத்தல் வேண்டும் எனக் கூறி சிங்கள மக்களது வெறுப்பையும் தேடியது இக்காலத்தில், தமிழரசுக் கட்சியின் கோரிக்கை, சமஷ்டி அரசு. மொழிப்பிரச்சினை தலைதூக்கியதும் சமஷ்டிக் கோரிக்கையுடன் இருமொழிகட்கும் சம அந்தஸ்து வேண்டும்என்று கூறி அதற்காகவும் போராட முன்னின்றது.

தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்த காலஞ் சென்ற திரு பண்டாரநாயக்கா சிங்கள வகுப்புவாதிகளது தாகத்தைத் தீர்த்த பின்னர், தமிழ்ப் பேசும் மக்களது நியாயமான கோரிக்கையையும் வழங்கத்தான் வேண்டும் என உணர்ந்து 1957 ஆம் ஆண்டில். நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்தைக்கொண்டு வந்தார். இச்சந்தர்ப்பத்தில், காலம் சென்ற பண்டாரநாயக்கா ஓர் சிங்கள வகுப்பு வாதியாக காட்சியளித்தாலும் கூட, இலங்கையில் வாழும் தமிழ்ப்பேசும் மக்களும் உரிமையோடு வாழவேண்டும் என்பதனை உணர்ந்ததினுலேயே. நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்தைக் கொண்டு வந்தார் எனக் கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், இந்நிலையை ஏற்காத தமிழ் மக்கள், தமிழரசுக் கட்சியின் தலைமையில் போராட்டப்பாதையிலே இறங்கினர். இக்காலத்திலேயே சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பித்தது. இப்போராட்டம் முறியடிக்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில், இலங்கை சமசமாஜக் கட்சி இருமொழிகட்கும் சம அந்தஸ்து வழங்கவேண்டும் எனக் கோரினலும் கூட இக்கட்சியின் மீது தமிழ்ப்பேசும் மக்கள் எவ்வித நம்பிக்கையும் வைக்கவில்லை. இக்கட்சியைச் சிங்களக் கட்சியெனத் தமிழ்மக்கள் கருதியபொழுது சிங்கள மக்கள் அதனைத் தமிழ்க்கட்சியென்றனர்.

1956 ம் ஆண்டு முதல் 1965வரை மொழிப்பிரச்சினையில் எவ்விதமாற்றமும் ஏற்படவில்லை. 1965ம் ஆண்டுத் தேர்தலில் இலங்கை தமிழரசுக்கட்சி போட்டியிட்ட பொழுது இருமொழி கட்கும் சம அந்தஸ்து கோரிக்கையையே முன்வைத்துப் போராடியது. ஆனல் நடந்தது என்ன?

தேர்தலின் பின்னர், இலங்கைத் தமிழரசுக் கட்சி எவ்வித மான முன்னறிவித்தலுமின்றி இரகசியமாக ஐக்கியதேசியக்கட்சியுடன் ஒப்பந்தம் செய்தபின்னர் 7 கட்சி அரசாங்கத்தில் பதவியையும் ஏற்றது. இரகசிய ஒப்பந்தத்தில் என்னதான் குறிப்பிடப்பட்டபொழுதிலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைந்தபின்னர் சிங்களம் மட்டும் சட்டம் நாடு பூராவும் அமுல் நடத்தப்படும் என்பதும், தமிழ்ப்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் நியாயமான தமிழ் உபயோகச் சட்டம் அமுல் செய்யப்படும் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. இக்காலத்தில், ஒரு சொட்டு இரத்தம் சிந்தாது தனிச்சிங்களச் சட்டத்தை நாடு பூராவும் திணித்து விட்டேன் எனப் பிரதமர் டட்லி சேனநாயக்காபெருமிதம் கொண்ட பொழுது, தமிழரசுக் கட்சியினர் வாய்பேசா மடந்தையராக இருந்தனர் அல்லவா?

எனவே, மொழிப்பிரச்சினை, 1965ம் ஆண்டில் தமிழரசுக் கட்சியின் அனுசரணையுடன், சிங்களம்மட்டும் என்பதுடன் நியாயமான தமிழ்உபயோகம் என்ற அடிப்படையிலேயே தீர்க்கப்பட்டது என்பதனை நாம் மறக்க, மறுக்க இயலாது.

ஆகவேதான், இன்று தமிழரசுக்கட்சியினர் தாம் இவ்வடிப்படையில் தீர்த்தற்கு உடந்தை அல்ல எனக்கூறினல் அவர்கள் காற்றுடிகளைப்போல் காலத்திற்குக்காலம் மாற்றமடையும் தன்மையுடையவர்கள், மொழிப்பிரச்சினையைத் தீர்க்க விரும்பாதவர்கள் என்றே கூறவேண்டும். மேலும் மொழிப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் அது தம்மாலேயே தீர்க்கப்படவேண்டும் என்ற அபிப்பிராயமும் அவர்களிடம் உண்டு எனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகின்றது. தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்த வரையில், மொழிப் பிரச்சினையை யார் தீர்த்தாலும் சரி, அதனைத் தீர்த்த பின் நாட்டை முன் நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பாதையையே நாம் கடைப்பிடிக்க வேண்டுமல்லவா?

## மொழிப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட இருக்கின்றது?

தற்பொழுது வரையப்பட்டுள்ள அரசியல் சட்டத்தில் மொழிப் பிரச்சினை சம்பந்தமாக வகுக்கப்பட்டது என்ன?

1. ஸ்ரீ லங்காவின் உத்தியோக மொழி, சிங்களமாகும்.
2. தமிழ் மொழி விசேஷ விதிச்சட்டத்திற்கமைய தமிழ் மொழி உபயோகப்படும்.
3. இலங்கையின் சட்டங்கள் யாவும் சிங்கள மொழியில் ஆக்கப்படும். இவ்வாறு ஆக்கப்படும் ஒவ்வொரு சட்டத்தின் மொழி பெயர்ப்பும் தமிழில் இருத்தல் வேண்டும்- (இந்நிபந்தனை கட்டாயமான நிபந்தனையாகும். மேலும், ஆங்கிலம் உபயோகிக்கப்படமாட்டாது என்பதனை அவதானிக்க.)
4. தற்பொழுது நடைமுறையிலிருக்கும் வலுவுடைய சட்டங்கள் யாவும் கூடிய சீக்கிரத்தில் சிங்களத்திலும் தமிழிலும் மொழி பெயர்க்கப்படவேண்டும. (அதாவது, நம் நாட்டின் சட்டங்கள் யாவும் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் இருக்கும் என்பதனை அவதானிக்க. ஆங்கில மொழியில் இருக்கும் இச்சட்டங்கள், நடைமுறையில் அற்றுப் போகும் என்பதையும் அவதானிக்க. மேலும், தமிழ் மொழியில் கல்வி கற்கும் எவராவது பிறிதொரு மொழியை - சிங்களம் உட்பட - கற்று நாட்டின் சட்டத்தை விளங்க வேண்டிய நிலை அற்றுப்போகும் என்பதையும் உற்று நோக்கவும்.)
5. இலங்கை பூராவும், நீதிமன்றங்கள், விசாரணைச் சபைகள் முதலியனவற்றின் மொழி, சிங்களமாகும். இத்துடன், வழக்குரைகள் தீர்ப்புகள் முதலியனவும் சிங்கள மொழியிலேயே இருக்கும். ஆனால், வட - கீழ் மாகாணங்களைப் பொறுத்தவரையில், தேசிய சபை அதனது சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் வேறு வகையில் ஏற்பாடு செய்யலாம். (இதன் மூலம் வட - கீழ் மாகாணங்களில் தமிழ் மொழியில் பதிவேடுகள் முதலியவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருப்பதற்கு தேசியசபை சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கலாம் எனபதனை அவதானிக்க. அவ்வாறு வழங்கும் பொழுது சிங்களம் மட்டும் என்ற விதி பாதிக்கப்படாது என்க.)

6. வட-கீழ் மாகாணங்களில் விண்ணப்பங்கள், வழக்குரைகள், பிரேரணைகள், மனுக்கள் முதலியவை தமிழ் மொழியில் சமர்ப்பிக்கலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படுபவை **நீதிமன்றத்தினுல் அல்லது நியாய சபையினுல்,** (தமிழரால் அல்ல) பதிவேட்டில் வைத்திருப்பதற்காக, சிங்களத்தில் மொழி பெயர்க்கப்படும்- (இக்கடமை தமிழ் மக்களுடையதல்ல, ஆனுல் நீதி மன்றத்தினுடையது என்பதனை அவதானிக்க.)

7. நீதிமன்றத்தினுல் உபயோகிக்கப்படும் மொழியை அறிந்து விசாரணைகள் முதலியவற்றில் பங்குபற்ற முடியாதோர் - அவர்கள் கட்சிக்காரர், விண்ணப்பக்காரர், நீதிபதி, யூரிமார் அல்லது நியாயசபை உறுப்பினர் யாராயினும் சரி - வழக்குகளை விளங்கிப் பங்குபற்றும் பொருட்டு மொழி பெயர்ப்பு நீதிமன்றத்தினுல் செய்து கொடுக்கப்பட வேண்டும். (அதாவது, தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களவர் நீதிமன்றங்கட்கு வரும் பொழுது அல்லது, சிங்களப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் நீதி மன்றங்கட்கு வரும்பொழுது தமக்கு விளங்கிய மொழியிலே மொழி பெயர்ப்புப் பெறுவதற்கான ஒழுங்குகள் சட்டமூலம் விதிக்கப்பட்டுள்ளன. இதனுல், **தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், அவர்கள், வட - கீழ்மாகாணங்களில் மட்டுமல்ல இலங்கையில் ஏனைய பாகங்களில் வாழ்ந்தாலும் கூட அவர்களுக்கு மொழி பெயர்ப்பு வசதி அரசியல் சட்டத்திலேயே வழங்கப்பட்டிருக்கின்றது.**

மேலே கூறப்பட்டதற்கமைய, புதிதாக வரையப்பட்ட அரசியல் சட்டத்தில், சிங்களம் மட்டும் நாடு பூராவும் நீதிபரிபாலன மொழியாக வகுக்கப்பட்டாலும் கூட தமிழ்ப்பேசும் மக்களது நியாயமான மொழி உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழரசுக் கட்சி 1965-ம் ஆண்டு ஏற்ற மொழிக் கொள்கைக்கிணங்க, அதாவது சிங்களம் மட்டும் என்பதுடன் நியாயமான தமிழ உபயோகம் என்பதற்கிணங்க, புதிய அரசியல் சட்டத்தில், தமிழ்பபேசும் மக்கள் எவ்விதத்தாலும் பாதிக்கப்படாத வகையில் வழிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு, தமிழ்ப்பேசும் மக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது நியாயமான மொழி உரிமைகளைத் தமிழரசுக் கட்சி 1965 ல் ஏற்றதற்கமைய புதிய அரசியல் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள பொழுது இன்று, தமிழரசுக்கட்சி ஏன், எதற்காகத் தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கையைக் கிளப்பியுள்ளது?

மேலும், இவ்வரசியல் சட்டத்திலிருக்கும் இன்னுமோர் அம்சத்தினைத் தமிழரசுக்கட்சி வன்மையாக எதிர்க்கின்றபொழுதிலும் அதனைப் பற்றிப் பகிரங்கமாகக் கூறுவதில்லை. அது யாதெனில், புதிய அரசியல் சட்டத்தில் ஆங்கில மொழிக்கு எவ்வித இடமும் வழங்கப்படவில்லை. ஆங்கில மொழியை ஐக்கிய முன்னணி அரசாங்கம் புறக்கணிக்க வேண்டும் என்றதனால் அல்ல, ஆனால் நம் நாட்டில் வாழும் மக்கள் அரசாங்கத்துடன் தொடர்புகொள்ள விரும்பின் அல்லது நீதி பரிபாலிக்கப்படும்பொழுது தமக்குத் தெரியாத பிறிதொரு மொழியின் உதவியை நாடலாகாது என்பதினால் ஆங்கில மொழிக்குரிய விசேஷ அந்தஸ்து நீக்கப்பட்டாற்றான் அடுத்து வரும் காலத்தில் மொழிப்பிரச்சினை தானாகவே தீரும் என்ற காரணத்திற்காக, சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகட்குக் கொடுக்கப்பட வேண்டிய அந்தஸ்து கொடுக்கபபட்டது. இந்த, இரு மொழிகட்கும் சம அந்தஸ்து உண்டு எனக் கூறவில்லை. ஆனால், தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்த வரையில், தமிழரசார் ஏற்றுக்கொண்டதற்கமைய, நியாயமான தமிழ் உபயோகிப்பதற்கு வேண்டிய விதிகள் புதிய அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ளன என்பதை மட்டுமே வற்புறுத்த வேண்டும். எனவே, ஏன் தனித் தமிழ் நாடு?

## 29வது சரத்து :

தமிழ்ப் பேசும் மக்களது நல உரிமைகளை சோல்பரி அரசியல் சட்டத்தின் 29வது சரத்து பாதுகாத்தது, ஆனால், அச்சரத்து புதிய அரசியல் சட்டத்தில் இடம் பெறாததினால் தமிழ்ப் பேசும் மக்களது உரிமைகள், நலன்கள் பாதிக்கப்படும் எனத் தமிழரசார் கூறுகின்றனர்.

தமிழரசாரின் இப்பிரசாரம் எவ்வித ஆதாரமுமற்றது. ஏனெனில், 29 வது சரத்து இருக்கும் காலத்திலேயே இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினர் தம் பிரஜா உரிமையை இழந்தனர். இக்காலத்திலே, சிங்களச் சட்டமும் ஆக்கப்பட்டது. எனவே, 29வது சரத்து தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்ததா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. 29வது சரத்து மறைமுகமான உரிமைகளை வழங்கியதே ஒழிய சிறுபான்மையினரது நல உரிமைகளை நேரடியாக உறுதிப் படுத்தவுமில்லை, பாதுகாக்கவுமில்லை.

அரசியல் சட்ட விதிகள் மிக அழகான முறையிலே வரையப்பட்டாலும் கூட அதனை உபயோகிப்போர் துர்ப்பிரயோகம் செய்யலாமல்லவா? உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் சட்டம் நல்ல அரசியல் சட்டம் எனக் கூறப்பட்டாலும் கூட அங்கு வாழும் நீகிரோ மக்கள் எவ்வாறு உரிமையற்று வாழ்கின்றனர் என நாம் எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லவே இல்லை.

அரசியல் சட்டம் எத் தன்மையுடையதாக இருப்பினும், அதன் உள்ளக்கிடக்கையை அமுல் நடத்துவதிலேயே நன்மை தீமை தோன்றும். ஆதலினுல், நாட்டின் அரசாங்கத்திலேயே இத்தன்மை தங்கி இருக்கின்றது என்பது வெளிப்படை. உதாரணமாக, எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பினை மீறி, நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்பட்ட பின்னர், அவ்விதிகளை ஐக்கியதேசியக் கட்சி - தமிழரசுக்கட்சி அரசாங்கம் தமிழ்ப் பிரதேசத்தில் அமுல் நடத்தியதா என்ருல், இல்லை என்றே கூறவேண்டும். சட்டம் ஆக்கப்பட்டாலும் அதனை அமுல் நடத்துவதினுலேயே நன்மை தீமை எற்படும். ஆதலினுல். உலகம் போற்றும் அரசியல் சட்டத்தை வரைந்து சட்டமாக்குவதிலும் பார்க்க, பொது மக்களால் வரவேற்கக் கூடிய அரசியல் சட்டத்தை அல்லது பொது மக்களின் எதிர்ப்பைப் பெருத அரசியல் சட்டத்தை ஆக்கி அமுல் நடத்துவதே சிறந்த வழியாகும். ஐக்கிய முன்னணி அரசாங்கம், சிங்கள - தமிழ் மக்களை ஏமாற்ருது, தன் உண்மை நிலையை வெளிப்படுத்தி சிங்கள தமிழ் பெரும்பான்மை மக்களால் வரவேற்கக்கூடிய அரசியல் சட்டத்தை ஆக்குவதுமல்லாமல் அதனை அமுல் நடத்தி நாட்டையும் மக்களையும் ஒன்றுதிரட்டவும் முற்பட்டுள்ளது. இவ்விடயத்தைப் பொறுத்தவரையில், தமிழரசுக் கட்சியைப் போல காலத்திற்குக் காலம் நிலையை மாற்ருது பகிரங்கமாகக் கூறுவதுடன் அதற்கேற்க நடக்க இவ்வரசாங்கம் முற்பட்டுள்ளது என்பது வரவேற்கக் கூடிய தொன்ருகும்.

இச்சந்தர்ப்பத்தில், அரசியல் அமைப்புச் சபையில் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா பேசும் பொழுது, ஒரு நாடு எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்து முன்னேறி இருக்கின்றதோ அத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை அரசியல் சட்டம் பிரதிபலிக்க வேண்டும் என வற்புறுத்திக் கூறினர். எனவேதான், நாம் இற்றைவரை அபிவிருத்தியடைந்த நிலையையே, - எதிர்காலத்தின் கற்பனை நிலையை அல்ல, - இவ்வரசியல் சட்டம் பிரதிபலிக்கின்றது என்க. அதாவது, சிங்களம் மட்டும் என்பதுடன் நியாயமான தமிழ் உபயோகம் என்ற நிலைக்கு ஏற்க இன்றைய அரசியல் சட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆனல், நம்நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் பொழுது, நாட்டில் வாழும் மக்களிடையே பரஸ்பர ஒற்றுமை ஏற்பட்டு வளரும்பொழுது அந்நிலைக்கேற்ற இன்னுமோர் புதிய அரசியல் சட்டமும் வருங்காலத்தில் தோன்றும்.

இத்தகைய புதியதோர் நிலையை சிங்கள - தமிழ் மக்கள் ஒற்றுமையாக உருவாக்கு முயலும்பொழுது இவ்விரு இனத்தவரிடையே பரஸ்பர ஒற்றுமை வளரும். மேலும், நம் நாட்டில் சோஷலிஸத்தை அமைக்கும் முயற்சியில் இருசாராருக்குமிடையே ஏற்படும் ஐக்கியமானது, சோஷலிச எல்லையை அடைந்த பின் அந்நிலைமைக்கேற்ற அரசியல் சட்டம் வரையப்படும் பொழுது, புதிய ஒற்றுமை நிலையை வெளிப்படுத்தும் என்பதற்கு சோஷலிஸ நாடுகள் ஆதாரமாகும்.

## மொழிப்பிரச்சினை தீர வழி என்ன?

மொழிப் பிரச்சினையைத் தமிழரசுக்கட்சி ஒன்ருலேயே தீர்க்க முடியும் என்ற எண்ணக் கருத்தை அக்கட்சியினர் பரப்புகின்றனர். மேலும், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாகத் திகழ்கின்ரோம் என்றும், தமிழ் மக்களை (உண்மையில் ஏமாற்றினலும் கூட) ஏமாற்ருதகட்சி என்றும் தமிழர்களைத் தலைவர்களாகக் கொண்ட கட்சி என்ற காரணத்தாலும் தமிழரசுக்கட்சி ஒன்றினலேயே இப்பிரச்சினையைத்தீர்க்க முடியும் எனப் பொதுவாகக் கூறப்படுகின்றது. இத்தகைய அபிப்பிராயம் தவறுதலானது. இவ்வபிப்பிராயத்தை வைத்திருப்போர், ஏன் இப்பிரச்சினை தோன்றியது என அறிய முற்படாததே காரணமாகும்.

மொழிப்பிரச்சினை தோன்றியதற்குக் காரணம் தான் என்ன? ஆங்கிலேயர் எம்மை அரசாண்ட காலத்தில், ஆங்கிலம் நிர்வாக மொழியாக இருந்தது. அக்காலத்தில், ஆங்கிலக் கல்வியைப் பெற்று அரசாங்கத்தில் சேவை புரிவதற்கான சந்தர்ப்பம், சூழ்நிலை யாவும் தமிழ் மக்களுக்குப் பெரும் உதவியாக இருந்தன. ஆதலினல், அரசாங்க சேவையில் கூடிய விகித ஸ்தானங்கள் தமிழர் கையில் சிக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், இலவசக் கல்வி வந்தது. இதன் பயனாக, கல்வி கற்போர் விகிதம் படிப்படியாக வருடாவருடம் அதிகரித்தது. இது இவ்வாறிருக்க, கல்வி பயின்று பரீட்சைகளில் சித்தியடைந்து வேலை தேடுவோர் தொகையும் படிப்படியாக அதிகரித்தது. ஆனால், வேலை தேடுவோர் விகிதம் ஒருபுறம் அதிகரிக்க வேலைவாய்ப்பு வசதி அதற்கேற்க அதிகரிக்கவில்லை. இப்பிரச்சினை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மட்டுமல்ல சிங்களப்பிரதேசத்திலும் தோன்றியது. பின்னர், 1956-ம் ஆண்டில் கல்வி ஊட்டும் முறை மாற்றமடைய, கல்வி வசதி கிராமப்புறங்கட்கும் பரவலாகச் செறிந்தது. இதனால், வேலை தேடுவோர் தொகை மேலும் பன்மடங்காகியது. இன்று, கல்வி வசதி மேலும் அதிகரிக்க, வேலைதேடுவோர் தொகையும் அதிகரிக்கும். ஆனால், வேலைவாய்ப்பு வசதியானது வேலை தேடுவோர் தொகை அதிகரிக்கும் விகிதமளவிற்கு அதிகரிக்காததினால், வருடாவருடம் வேலையற்றோர் தொகையும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

1956-ம் ஆண்டில் மொழிப்பிரச்சினை ஆரம்பமான பொழுது சிங்களம் மட்டும் சட்டம் அமுலாக்கப்பட்டால், சிங்களம் தெரியாத தமிழர்கள் அரசாங்கசேவையிலிருந்து வெளியேறவேண்டும், அவ்வாறு வெளியேறினால் அவர்களது காலியான இடங்கள் யாவும் சிங்களம் படித்தோருக்குக் கிட்டும் என எண்ணியதினால், தனிச் சிங்களச் சட்டத்தின் பின் தமது வேலைப்பிரச்சினை தீரும் என்று எண்ணினர். ஆனால், தமது வேலையில்லாப் பிரச்சினையைச் சுகமாகத் தீர்க்கமுடியும் என எதிர்பார்த்த அவர்கள் அவ்வளவு சுகமாகத் தீர்க்கமுடியாது என்பதனையே படிப்படியாக உணர்ந்தனர். மேலும், சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய வேலையில்லாப் பிரச்சினை அரசாங்க சேவையில் வேலையைப் பெறுவதினால் தீர்ந்துவிடும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை நாடினாற்றான் தீரும் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் குடிகொண்டது. இதனாலேயே 1970-ம் ஆண்டுத் தேர்தலில் பெரும்பான்மையான சிங்கள மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சிகளை ஆதரித்ததுமல்லாமல் அக்கட்சிகளின் வேலைத்திட்டத்திற்குத் தம் அங்கீகாரத்தையும் வழங்கினர்.

இச்சந்தர்ப்பத்தில் வேலையில்லாப் பிரச்சினைக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமிடையே இருக்கும் தொடர்பு என்ன என அறிதல் வேண்டும். எமது நாடு விவசாயத்தை ஆதாரமாகக் கொண்ட நாடு. எமது வருமானம் தேயிலை, றப்பர், தென்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதினலேயே வருகின்றது. நாட்டின் வேலைவாய்ப்பு வசதிகள் அரசாங்கத்துறையிலும், தனியார்துறை ஸ்தாபனங்களிலும் மட்டுமே உள்ளன. நாட்டின் தொழிற்சாலை வளம் பெருகவில்லை. ஆகவேதான் வருடாவருடம் வேலை தேடுவோர் தொகை அதிகரிக்க வேலைவாய்ப்பு வசதி ஸ்தம்பித்த நிலையில் இருக்கின்றது. விவசாய அபிவிருத்தியினல் வேலை வாய்ப்பு வசதி அதிகரிக்காது. ஆனல் தொழிற்சாலை வளம் அதிகரித்தால், தொழில் விற்பன்னர், நிர்வாகிகள் தொழிலாளர் முதலானேருடைய தேவை அதிகரிக்கும். ஆகவேதான் நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதாயின் தொழிற்சாலை வளத்தைப் பெருக்க வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. உதாரணமாக இவ்வரசாங்கம் பதவியேற்றபின்னர் ஐந்தாண்டுத்திட்டத்தை அமுல் நடத்த முற்பட்டமையினல் வேலையற்ற பட்டதாரிகள், வேலையற்ற உயர்தர பொதுத் தராதரப்பத்திரம் பெற்றோர் முதலானேரது வேலையில்லாப் பிரச்சினை பெருமளவிற்குத் தீர்க்கப்பட்டுள்ளது.

முடிவாகக் கூறின் மொழிப்பிரச்சினைக்கு என்ன காரணம் என வினவினல் கல்வி வசதி அதிகரித்ததினல் கற்றோர் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரிக்கும் பொழுது, அதே அளவிற்கு அல்லது அவ்விகிதத்திற்கு மேலாக வேலைவாய்ப்பு வசதியைக் கொடுக்கக்கூடிய தொழிற்சாலை வளம் அதிகரிக்காததினல்வேலையில்லாப்பிரச்சினை தோன்றியது எனலாம். ஆனல் தொழிற்சாலை வளம் ஸ்தம்பித்த நிலைமையிலிருக்கின்றதன் காரணமாக, வகுப்பு வாதத்தின் அடிப்படையில் இப்பிரச்சினையைத்தீர்க்க சிங்கள, தமிழ் தலைவர்கள் முற்பட்டனர். இப்பிரச்சினை தீர்வதாயின் திட்டமிடப்பட்ட பொருளாதார அபிவிருத்தியை நாம் நாடி அதன் மூலம் தற்பொழுது வேலையற்றோருக்கும் இனிவரும் சந்ததியினருக்கும் வேலை வாய்ப்பு வசதியை அளிக்கவேண்டும். இப்பிரச்சினையைத்தீர்க்க வேறு வழியில்லை இவ்வழியை விடுத்து தனித்தமிழ் நாடு கோருவதால் எவருக்கும் எவ்வித அனுகூலமும் ஏற்படாது.

## மாவட்ட நிர்வாகம்-ஐந்தாண்டுத்திட்டம் - மாவட்ட அபிவிருத்திச் சபைகள்.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வேலைத்திட்டம், முதலாவது சிம்மாசனப் பிரசங்கம் ஆகியவற்றிற்கமைய, கச்சேரி நிர்வாக முறையை ஒழித்து அதன் அழிவில் மாவட்ட நிர்வாகசபைகள் அமைக்கப்படும் எனக் கூறப்பட்டது. இத்திட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்திற்கமைய மக்கள் சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இச்சபைகள் நாடு பூராவும் அமைக்கப்படாததின் காரணமாக மாவட்ட சபைகள் அமைக்கப்படவில்லை. இச்சபைகள் இவ்வருடம் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு அமைக்கப்பட்டால் கச்சேரி நிர்வாகமுறை அழிவதுமல்லாமல் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மாவட்ட சபைகளின் நிர்வாகம் தோன்றும். இந்த நிர்வாகம் சோஷலிஸக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பு முறையாகும். இந்த நிர்வாக முறையானது தமிழரசுக்கட்சியினர் கூறிய பிரதேச சபைகட்கு ஒப்பானவைஅல்ல. இருபபினும் இம்முறை முதலாளித்துவ கட்டுக் கோப்பை மீறி சோஷலிஸ அடிப்படையில் அமைந்துள்ளது.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் பிரதான இடத்தைப் பெறும் அம்சம் அதன் ஐந்தாண்டுத் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை நாடும் பொழுது, பெருமளவிற்கு புதிய தொழிற்சாலைகளை அமைத்து அவற்றின்மூலம் நாட்டின் செல்வத்தைப் பெருக்கி மக்களின் சராசரி வருமானம் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை உயர்த்தி வேலையற்றோர் தொகையை குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் அமுல் நடத்தப்படும் பொழுது பொதுத்துறை, தனியார்துறை ஆகிய இரு துறைகள் மூலமாக எமது எல்லையை நாட வழிவகுக்கப்படுகின்றது. அதுவுமின்றி பொருளாதார அபிவிருத்தியை நாடும்பொழுது எவ்வித பாரபட்சமும் இன்றி - அதாவது சிங்களப்பிரதேசம், தமிழ்ப் பிரதேசம் என்ற பாரபட்சம் இன்றி திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக வடபிராந்தியத்தின் எண்ணெய் ஆராய்ச்சி, உப்பள அபிவிருத்தி, கண்ணாடித்தொழிற்சாலை, இரசாயனத் தொழிற்சாலை, திருகோணமலைத் துறைமுகம், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் போன்றவற்றை ஏற்படுத்த இவ்வரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் நாட்டின் அபிவிருத்தியை நாடும் பொழுது சாதி, மத, மொழி வேறுபாடின்றி நாடவே திட்டமிட்டுள்ளது.

மாவட்ட அபிவிருத்திச்சபைகள், நாடு பூராவும் அமைக்கப் பட்டுள்ளன. இவை ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவுக்கென உண்டு. இச்சபைகள் மூலம், அவ்வப்பிரிவுகளில் இருக்கின்ற மூலப் பொருள்கள், சிறு கைத்தொழில்கள் முதலானவற்றை அபிவிருத்தி செய்வதுடன் அவ்வப்பிரதேசத்தில் பயிர் செய்யக்கூடிய பண வருவாயுடைய விவசாயப் பொருள்கள், உபஉணவுப் பொருள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றை அபிவிருத்தி செய்வதற்கென பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாட்டில் இருக்கும் ஒவ்வொரு கிராமத்தின் பொருளாதாரத்தையும் வளர்க்க வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்திற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மேலே குறிப்பிட்டதற்கமைய நாட்டின் நிர்வாகத்தினை மக்கள் கையில் ஒப்படைக்க வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதுமல்லாமல் நாட்டின் தொழில் வளர்ச்சியையும் ஒவ்வொரு கிராமத்தின் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் எனத்தீர்மானித்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இத்திட்டங்களை வெற்றிகரமாக அமுல் நடத்த மக்களின் - தமிழ் பிரதேசத்தின் தமிழ்ப்பேசும் மக்களின் - ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவசியமன்றோ? இதனையே மக்கள் முன்னணி அரசாங்கம் கேட்கின்றது. இந்நிலையில், தனித்தமிழ் நாடு அவசியமா?

## தனித் தமிழ் நாடு அவசியமா?

மொழிப்பிரச்சினை தோன்றிய காலத்தில், இருமொழிகட்கும் சம அந்தஸ்து வேண்டும் எனக் கோரிய தமிழ்அரசுக்கட்சியினர் இன்று அதனைக் கைவிட்டுவிட்டனர். சிலவருடங்கட்கு முன்னர் அடங்காத் தமிழர் முன்னணித் தலைவர் திரு, சுந்தரலிங்கத்தை விசரன், பைத்தியகாரன் எனக் கூறிய இவர்கள் இன்று தனித்தமிழ் நாடு வேண்டும் என்ற கோரிக்கையைக் கிளப்பியுள்ளனர். இக்கோரிக்கையைக் கிளப்புவதற்கு அரசியல் வானில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதா? சமஷ்டி அரசு வேண்டுமென்ற இவர்கள் இன்று தனித் தமிழ் நாடு கோருகின்றனர். அது அவசியமா?

தனித் தமிழ் நாடு ஏற்பட்டால் தமிழர்களின் மொழிப் பிரச்சினை தீரும் என்பர். அவ்வாறு தீரும் என ஏற்றுக்கொள்வோம். மேலும், தமிழர்களது கலை, கலாச்சாரம் பாதுகாக்கப்படும் எனக் கூறினும் அதனையும் ஏற்றுக்கொள்வோம். ஆனல், மொழியும் கலை கலாச்சாரமும் தமிழ்மக்களது பசி பட்டினியைத் தீர்க்குமா? "பசி வந்திடப் பத்தும் பறந்துவிடும்" என்று ஔவையார் கூறினர், அவர் தமிழரசுக்கட்சியினர் எதிர்காலத்தில் தோன்றுவர் என எண்ணிக் கூறவில்லை. ஆனல், உலகம் அறிந்த உண்மையையே அவர் கூறினர்.

தனித் தமிழ் நாட்டைப் பற்றிப் பேசும் பொழுது, அதன் எல்லை அல்லது விஸ்தீரணம் என்ன என நிர்ணயிக்கப்பட வேண்டும். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதிற்கொண்ட எல்லையைப் போராட்டத்தின் மூலம் அடைவது மிகக் கஷ்டமானதாகும். அதனைத் தான் நாம் நிர்ணயித்தாலும், மனோ சக்தியினுல் அல்லது ஆத்மீக சக்தியினுல் அல்லது இந்திய நாட்டின் உதவியினுல் கிடைக்கும் என எதிர்பார்க்க இயலாது. தனித் தமிழ் நாட்டிற்காக நாமே போராடிப் பெற வேண்டும். இதற்கு படைப்பலம், ஆயுதபலம் முதலியன வேண்டும். போராட்டத்தில் வெற்றியீட்ட உணர்ச்சி, ஆண்மை, சுயநம்பிக்கை முதலியன மட்டும் போதாது. இத்துடன் எதிரியை வெல்லக் கூடிய சக்தியும் வேண்டும். இச்சக்தி எம்மிடம் இல்லாததினுல், போராட்டம் ஆரம்பித்த நாளன்றே முடிவு கண்டுவிடும். அதாவது, படைப் பலத்தினுல் நசுக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டு எம்முடன் சகோதரராக வாழ விரும்பும் சிங்களச் சகோதரருக்கு அடிமைகளாக வாழ வேண்டிய நிலையே ஏற்படும்.

மேலும் போராட்டப்பாதையை நாட முற்படும் நாம் இன்னுமோர் அம்சத்தைப் பற்றி யோசித்தல் வேண்டும். அதாவது, தென் இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறியுள்ள தமிழர்களது கதி தான் என்ன? அவர்களது உயிரையும் சொத்துக்களையும் இடப்பெயர்ச்சி செய்தாக வேண்டும். இது சாத்தியமா? இந்திய-பாகிஸ்தான் சரித்திரத்தை எடுத்து நோக்கினுல், இடப் பெயர்ச்சியினுல் ஏற்படக் கூடிய பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய பொருளாதாரச் சக்தி எம்மிடம் உண்டா? இல்லை.

தனித்தமிழ் நாட்டின் பொருளாதாரச் சக்தியைப்பற்றி உற்று நோக்கினுல், இப்பிரதேசத்தில் விவசாயப் பொருள்களையும் மீன் வகைகளையும் உற்பத்திசெய்யக் கூடியதாக இருப்பினும், போராடக்கூடிய சக்தி இல்லை. இக்காரணத்தினுலேயே தனித் தமிழ் நாட்டிற்காகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டால், நைஜீரியாவின் பகுதியாக விளங்கும் பியாபிரா பிரதேச மக்கள் செத்து மடிந்ததைப் போல் மடிய வேண்டிய நிலை ஏற்படும்.

இதனுல் தமிழ் மக்கள் அல்லது தமிழ்ப்பேசும் மக்கள் சிங்கள மக்களுக்கு அடிமையாக வாழ வேண்டும் என்று கூறவில்லை. தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கை உறுதியான அரசியல் அடிப்படையில் எடுக்கப்படாத கோரிக்கை. இக்கோரிக்கைக்காக தமிழ்பேசும் மக்கள் போராட மாட்டார்கள். ஆனுல் தமிழர்கள் மட்டுமே பாராடவேண்டும். மேலும், தமிழர்களுள் இக்கோரிக்கையை ஆதரிக்காதவர்கள் பலர். ஆதலினுலேயே, இக்கோரிக்கை அசாத்

தியமானது. ஆதலினால், தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன? தமிழ் பேசும் மக்களது எதிர்காலம் என்ன? சிங்கள மக்களுக்கு அடிமைப்பட்டு சுய மரியாதையை இழந்து, மானம் இழந்து வாழ்வது தானா கதி?

## வழி என்ன?

தமிழர்கள் மட்டுமல்ல, தமிழ்ப்பேசும் மக்கள் உட்பட நாம் இலங்கையில் சுயமரியாதையுடன் வாழ வழி உண்டு. அவ்வாறு வாழ்வதற்கு தமிழரசார் காட்டும் வழி அல்ல இவ்வழி.

நாம் முன் கூறியதைப்போல், தமிழரது மொழிப் பிரச்சினையாயினும் சரி, அவர்களது கலைகலாச்சாரப் பிரச்சினையாயினும் சரி, அப்பிரச்சினை தமிழரசார்காட்டும் வகுப்புவாத வழியால் தீர்க்க முடியாதது. சூத்தைப்பல்லினால் நோவுண்டாயின் சூத்தைப்பல்லைப் பிடுங்க வேண்டும். அதே போல் மொழிப்பிரச்சினை தீர்வதாயின் மொழிப் பிரச்சினைக்குரிய காரணமான பொருளாதாரப் பிரச்சினைதீர வேண்டும் என்பதற்கிணங்க பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க வழி தேட வேண்டும்.

நம் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதாயின், காலம் சென்ற திரு. கந்தையா (பா. உ) கூறியவாறு கறி முருங்கையை நட்டுத் தீர்க்க முடியாது. அல்லது, இன்று சிலர் கூறுவது போல், வரண்ட பிரதேசத்தில் விவசாயம் செய்து பொருளாதார அபிவிருத்தியை நாட இயலாது; அல்லது அதன் மூலம் உச்ச வரம்பை அடைந்துள்ள வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க இயலாது. அதுவுமின்றி, எம்மவரது வாழ்க்கைப்பிரச்சினையைத் தீர்ப்பதாயின், அதாவது சராசரி வருமானத்தை அதிகரிக்கச் செய்து வாழ்க்கைத்தரத்தை உயரச் செய்வதாயின், விவசாயத் தொழிலை மட்டும் நம்பி நில்லாது தொழிற்சாலை வளத்தையும் நாட வேண்டும். இவ்வழி ஒன்றே எமது மீட்சிக்கு வழி. வேறு வழிகள்— குறிப்பாகக் குறுக்கு வழிகள் இல்லை.

இவ்வழியைக் கடைப்பிடிப்பதற்கு தமிழரசாரிடம் எவ்வித திட்டமும் இல்லை. ஆனால் சோஷலிசக் கொள்கையைக் கடைப்பிடித்து அவ்வெல்லையை நாடவேண்டும் எனக்கூறும் இலங்கை சமசமாஜக் கட்சியினரிடம், இவ்வெல்லையை அடைவதற்கான திட்டம் உண்டு இத்திட்டத்தின் கீழ், பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்து, சிங்கள-தமிழ் இனங்கட்கிடையேயுள்ள கசப்பையும் வெறுப்பையும் தீர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். அவ்வாறு தீர்க்கும் பொழுது, ஒருவர் இன்னொருவருக்கு அல்லது ஓர் இனம் இன்னோர் இனத்திற்கு அடிமையாக வேண்டிய அவசியமே இல்லை. எல்லோரும் சமத்துவமாக வாழ்வதுடன் ஐக்கியத்தின் அடிப்படையிலே நாம் ஒன்று கூடி ஒருவர் இன்னொருவருக்கு உதவியாகவும் ஒத்தாசையாகவும் நின்று பொதுப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் அன்றோ?

முடிவாகக் கூறுகில், தமிழரசார் காட்டும் தனித்தமிழ் நாட்டு வழி அல்ல தமிழ் மக்களது வழி. தமிழரசாரது வழி வங்குரோட்டு வழி. அழிவுப்பாதையின் வழி. தமிழ் மக்கள், தமிழ்ப்பேசு ம்மக்கள் உரிமையோடும் சுதந்திரத்துடனும் வாழ்வதாயின் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஓர் அங்கமான இலங்கை சமசமாஜக் கட்சியின் வழிதான் தலைசிறந்தது. இக்கட்சி ஒன்றே. அன்று முதல் இற்றை வரை தமிழ்பேசும் மக்களது நண்பராக இருந்ததுமல்லாமல் அவர்களது பிரச்சினைகளை நன்கு உணர்ந்து சிறந்த வழியைக் காட்டுகின்றது. இக் கட்சியின் தலைமையில் சோஷலிஸத்தை அடைந்து எம் பிரச்சினைகளைத் தீர்ப்போமாக.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org